# FIRST INFORMATION REPORT

முதல் தகவல் அறிக்கை

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

8073073

C

1. District / மாவட்டம்: திருவண்ணாமலை  PS / காவல்நிலையம்: ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு திருவண்ணாமலை  Year / ஆண்டு: 2019  FIR No. / மு.த.அ. எண்: 02/2019  Date / நாள்: 31-01-2019

2. (i) Act சட்டம்:  Sections பிரிவுகள்:

   (ii) Act சட்டம்: Prevention of Corruption Act 1988  Sections பிரிவுகள்:

   (iii) Act சட்டம்: as amended by Prevention of Corruption (Amendment) Act 2018  Sections பிரிவுகள்: 7

   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் 30-01-2019  Date from : நாள் முதல் 1800 மணிக்கு முன்பு  Date to : நாள் வரை

   Time Period : நேர அளவு  Time from : நேரம் முதல்  Time to : நேரம் வரை

   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 31-01-2019  Time : நேரம் 1600 மணி.

   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண்  Time : நேரம்

4. Type of Information : Written/ Oral :
   தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக  எழுத்து மூலமாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
   குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்  சார் பதிவாளர் அலுவலகம், வேட்டவலம், திருவண்ணாமலை மாவட்டம். சுமார் 24 கி.மீ. தென் கிழக்கு

   Beat Number : முறைக் காவல் எண்  (b) Address : முகவரி

   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
   இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம் –

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர்  திரு. து. கிருஷ்ணமூர்த்தி  (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர்

   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 1971  (d) Nationality நாட்டினம் இந்தியர்  (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

   Date of Issue : வழங்கப்பட்ட நாள்  Place of Issue : வழங்கப்பட்ட இடம்

   (f) Occupation : தொழில்  மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம் வேலூர் @ திருவண்ணாமலை

   (g) Address : முகவரி  மாவட்ட ஆட்சியர் அலுவலகம், மாவட்டம், வேலூர்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

   திருமதி. ப. தென்றல் வயது 36/2019
   த/பெ பற்குணன்,
   சார்பதிவாளர் நிலை-2, சார்பதிவாளர் அலுவலகம் வேட்டவலம், திருவண்ணாமலை மாவட்டம்

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம் –

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித்தாள் இணைக்கப்பட்டுள்ளது

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ........................................... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

[signature] 31/1/19

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

[signature] 31/1/2019

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
31-01-2019 அன்று
1700 மணிக்கு

Name: பெயர் V. SARAVANAKUMAR
Rank: நிலை D.S.P. ...............No. எண் ..........
VKAC,
Tiruvannamalai.

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)p 2

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது:

இன்று 31.01.2019-ஆம் தேதி பிற்பகல் 1600 மணிக்கு நான் நிலைய ஆஜரில் இருந்த போது திரு. து.கிருஷ்ணமூர்த்தி, மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர், வேலூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்கள், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், வேலூர் அவர்கள் திருவண்ணாமலை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் ஆஜராகி கொடுத்த கணினியில் தட்டச்சு செய்யப்பட்ட புகாரின் விவரம் பின்வருமாறு: அனுப்புநர் து.கிருஷ்ணமூர்த்தி, மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர், வேலூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்கள், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், வேலூர். பெறுநர் காவல் துணை கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திருவண்ணாமலை. நாள்: 31.01.2019 அய்யா, பொருள்: திடீர் சோதனை – திருவண்ணாமலை மாவட்டம் வேட்டவலம் சார்பதிவாளர் அலுவலகத்தில் 30.01.2019 அன்று கூட்டு திடீர் சோதனை மேற்கொண்டது - கைப்பற்றப்பட்ட பணம் மற்றும் ஆவணம் – ஒப்படைப்பு - நடவடிக்கை எடுக்க கோருதல் - தொடர்பாக. பார்வை: சம்மந்தப்பட்ட ஆவணங்கள். நான் வேலூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்களுக்கு மாவட்ட ஆய்வுக்குழு அலுவலராக உள்ளேன். திருவண்ணாமலை மாவட்டம், கீழ்பென்னாத்தூர் வட்டம், வேட்டவலம் பேரூராட்சியில் காந்தி சாலையில் திரு.N.வெங்கடேசன் என்பவருக்கு சொந்தமான கதவிலக்கம் 212 வீட்டில் இயங்கி வரும் பத்திரப்பதிவு சார் பதிவாளர் அலுவலகத்தில், பத்திரம், பிற பதிவுகள் மற்றும் சான்றிதழ்கள் பெற வரும் பொது மக்களிடம் அவர்களுக்கு செய்ய வேண்டிய வேலைகளுக்காக சார்பதிவாளர் மற்றும் அலுவலக பணியாளர்கள் தனித்தனியாக பதிவு செய்யப்படும் பத்திர மதிப்புகளுக்கு ஏற்பவும், அவரவர் செய்து முடிக்க வேண்டிய பணிகளுக்காக நேரடியாகவும், ஆவண எழுத்தர்கள் மற்றும் இடைத்தரகர்கள் (புரோக்கர்கள்) மூலமும் கையூட்டு பெறுவதாக கிடைக்கப்பெற்ற நம்பகமான தகவலின் பேரில், 30.01.2019 மாலை 1800 மணிக்கு என்னுடைய தலைமையில், திருவண்ணாமலை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலர்களுடன் இணைந்து, வேட்டவலம் பேரூராட்சியில் உள்ள சார் பதிவாளர் அலுவலகத்தில் இருதுறை திடீர் சோதனை மேற்கொள்ளப்பட்டது. இந்த திடீர் சோதனையின் போது, 1) திருமதி.ப.தென்றல் (36/2019), த/பெ பற்குணன், சார் பதிவாளர் நிலை-2, 2) உதவியாளர் திரு.கு.தமிழரசன் (29/2019) த/பெ குப்பன், தகவல் தொகுப்பு பணியாளர் திரு.ஜெ.பிரபு (29/2019) த/பெ ஜெயக்குமார் ஆகியோரும், ஆவண எழுத்தர், அவரது உதவியாளர் மற்றும் பொது மக்கள் சார் பதிவாளர் அலுவலகத்தினுள் இருந்தார்கள். மேலும், வேலூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்ட ஆய்வுக்குழு அலுவலராகிய என்னுடன், திருவண்ணாமலை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் துணை

கண்காணிப்பாளர் திரு.வி.சரவணகுமார் மற்றும் காவல் குழுவினர் சார் பதிவாளர் அலுவலகத்தை சோதனை செய்தனர். மேலும், சார் பதிவாளர் நிலை-2 திருமதி.ப.தென்றல் அவர்களை வேலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் திருமதி.P.விஜயலட்சுமி அவர்கள், மேற்படி சார் பதிவாளர் திருமதி.ப.தென்றல் அவர்களின் ஹேண்ட் பேக்கை சோதனை செய்ய, அதில் ரூ.1,600/-ம், ஒரு கார் சாவியும் இருந்தது. அந்த பணம் பற்றி அவரிடம் விசாரிக்க, அவர் அந்த பணம் ரூ.1,600/-ஆனது தனது சொந்தப்பணம் என்று சொன்னார். ஆனால், வேட்டவலம் சார் பதிவாளர் அலுவலகத்தில் பராமரிக்கப்பட்டு வரும் தனி நபர் ரொக்கப்பதிவேட்டை பார்க்க, அதன் ஐந்தாவது பக்கத்தில் 30.01.2019-ஆம் தேதிக்குண்டான பதிவில், மேற்படி சார் பதிவாளர் திருமதி.ப.தென்றல் அவர்களின் பெயருக்கு நேராக ரூ.100/- என எழுதப்பட்டு அவரால் கையெழுத்திடப்பட்டிருந்தது. மேற்படி திருமதி.ப.தென்றல் 30.01.2019-ஆம் தேதி காலை பணிக்கு அலுவலகத்திற்குள் நுழையும்போது எடுத்து வந்த பணம் ரு.100/-க்கு அதிகமாக அவரிடம் பணம் ரு.1,500/- இருந்ததால் அந்த பணம் வழக்கு நிமித்தமாக கைப்பற்றப்பட்டது. மீதம் உள்ள ரு.100/- அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. மேலும், சார் பதிவாளர் அவர்களின் மேஜை சோதனை செய்யப்பட்டதில், பணம் ஏதுமில்லை. பின்னர் சார் பதிவாளர் திருமதி.ப.தென்றல் அவர்களிடம் 30.01.2019 அன்று பதிவான ஆவணங்களின் எண்ணிக்கை தொடர்பாக விசாரணை செய்ய, அதற்கு அவர் 29 ஆவணப்பதிவுகள் மேற்கொள்ளப்பட்டதாக சொன்னார். அதில், ஐந்து கிரைய ஆவணப் பதிவுகளும், எட்டு ரத்து ஆவணங்களும், இரண்டு அடமானப்பதிவுகளும், ஐந்து கிரைய உடன்படிக்கைகளும், ஒரு டிரஸ்ட் பதிவு, ஒரு பிழை திருத்தலும், ஐந்து தான செட்டில்மெண்ட் பதிவுகளும், இரண்டு உரிமை ஒப்படைப்பு ஆவணங்களும், ஆக மொத்தம் 29 பதிவுகள் என சொன்னார். மேற்படி 29 ஆவணப்பதிவுகளுக்குண்டான பதிவுக்கட்டணம், குறுந்தகடு கட்டணம், உட்பிரிவு கட்டணம் ஆகியவை சேர்த்து மொத்த கட்டணம் ரு.90,950/- எனவும், அதில் இணைய வழியில், கட்டணமாக செலுத்திய தொகை ரு.90,920/- எனவும், அதில் மீதம் உள்ள ரூ.30/- உதவியாளர் திரு.கு.தமிழரசன் என்பவரின் மேஜை இழுவறையில் உள்ளதாக தெரிவித்து, அதனை எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணம் அரசிற்கு செலுத்த வேண்டிய கட்டணமாக இருந்த காரணத்தினால், அந்த பணம் ரு.30/- அவரிடமே திரும்ப கொடுக்கப்பட்டது. மேலும், முத்திரை சட்டப் பிரிவு 41-இன் கீழ் அரசிற்கு இணையவழியில் செலுத்திய தொகை ரூ.9,700/- என சொன்னார். பின்னர் சார் பதிவாளர் திருமதி.ப.தென்றல் அவர்களிடம், அவரது ஹேண்ட் பேக்கில் இருந்த கார் சாவி குறித்து விசாரிக்க, அதற்கு அவர் அந்த சாவியானது தனது கணவர் திரு.ஏழுமலை த/பெ

கோவிந்தசாமி என்பரது பெயரில் உள்ள TATA TIAGO XT (STRIKER BLUE) Regn.No.TN 25 BJ 2426 என்ற காரினுடையது என்றும், அந்தக்காரில்தான், தான் தினமும் போளூரில் இருந்து, அலுவலகத்திற்கு வந்து போவதாகவும், அந்த காரை ஓட்டுனர் திரு.வெங்கடேசன் என்பவர் ஓட்டி வந்ததாகவும், அவர் வெளியில் சென்றுள்ளதால் கார் சாவியை தன்னிடம் கொடுத்துவிட்டு சென்றுள்ளதாகவும் கூறினார். அந்த காரை சோதனை செய்ய வேண்டும் என அவரிடம் தெரிவித்தபோது, அவர் அலுவலகத்திற்கு வெளியில் அந்த கார் நிறுத்தியிருப்பதாக சொல்லி, அலுவலகத்திற்கு வெளியில் வந்து அந்த காரை அடையாளம் காட்டினார். பின்னர் அந்த காரை சோதனை செய்ய, அந்த காரின் டேஷ் போர்டில் கட்டாக பணம் இருந்தது. அதனை எடுத்து எண்ணிப் பார்க்க, அதில் ரூ.62,400/- இருந்தது. அந்த பணம் குறித்து, திருமதி.ப.தென்றல் அவர்களிடம் விளக்கம் கேட்க, அவரால் அந்த பணத்திற்கு தக்க முகாந்திரம் தெரிவிக்க இயலவில்லை. ஆதலால், அந்த பணம் ரூ.62,400/-ஐ விசாரணை நிமித்தமாக கைப்பற்றப்பட்டது. மேலும், அந்த காரில், அந்த காருக்குண்டான பதிவு சான்றின் ஒளிநகல் இருந்தது. அதில் மேற்படி காரின் உரிமையாளர் திரு.G.ஏழுமலை த/பெ கோவிந்தசாமி எனவும், காரின் நிறம் Striker Blue எனவும், காரின் பதிவு எண்.TN 25 BJ 2426 TATA Tiago Car என விவரங்கள் இருந்தன. பின்னர், சார் பதிவாளர் இருக்கையை அடுத்துள்ள தகவல் தொகுப்பு பணியாளர் திரு.பிரபு என்பவரின் மேஜையை சோதனை செய்ய, அதில் பணம் ஏதுமில்லை. மேலும், அவரது Back Bag-யை சோதனை செய்ய, அதில் இருந்த மணிபர்ஸில் பணம் ரூ.300/- இருந்தது. அது குறித்து, தகவல் தொகுப்பு பணியாளர் திரு.பிரபு என்பவரிடம் விசாரிக்க, அது தனது இரு சக்கர வாகனத்தின் எரிபொருள் செலவிற்காக எடுத்து வந்ததாக சொன்னார். அவர் ஒப்பந்த பணியாளர் என்பதால், தனி நபர் ரொக்கப்பதிவேட்டில், மேற்படி பணம் ரூ.300/- குறித்து அவர் பதிவு செய்யவில்லை. அந்த பணம் திரும்ப அவரிடமே ஒப்படைக்கப்பட்டது. பின்னர் உதவியாளர் திரு.கு.தமிழரசன் என்பவரின் மேஜையை சோதனை செய்ய, அந்த மேஜையின் வலது பக்க இழுவறையில் பணம் இருந்தது. அதனை எடுத்து எண்ணிப்பார்க்க, அதில் ரு.841/- இருந்தது. அந்த பணம் குறித்து, மேற்படி உதவியாளர் திரு.கு.தமிழரசன் என்பவரிடம் விசாரிக்க, அதில் முன்று மனுதாரர்களுக்கு, அவர்களது உறவினர்களின் இறப்பு சான்றுகள் வழங்க அரசு கட்டணமாக வசூலித்த தொகை ரு.800/- எனவும், மேலும், 30.01.2019 அன்று மொத்தம் நான்கு வில்லங்க சான்றுகள் எனவும், ஆறு ஆவண நகல்கள் வழங்கப்பட்டதெனவும், அதற்கு அரசு கட்டணமாக ரூ.2,900/- எனவும், அதில் இணைய வழியில் வசூலிக்கப்பட்ட தொகை

ரூ.2,859/- எனவும், மீதம் உள்ள பணம் ரூ.41/- ரொக்கமாக வசூலிக்கப்பட்டுள்ளது என உதவியாளர் திரு.கு.தமிழரசன் சொன்னார். ஆதலால், மேற்படி அரசுக்கட்டணமான ரொக்கத்தொகை ரூ.841/-ஆனது அவரிடம் திரும்ப ஒப்படைக்கப்பட்டது. மேலும், மேற்படி சார்பதிவாளர் அறைக்கு இணையாக உள்ள பதிவேடுகள் வைப்பறையில் உள்ள இரும்பு பீரோவை சோதனை செய்தபோது, அதில் ஒரு பிளாஸ்டிக் கவரில் பணம் ரூ.250/- இருந்தது. அது குறித்து, சார் பதிவாளர் திருமதி.ப.தென்றல் அவர்களிடம் விசாரிக்க, அந்த பணம் அரசால் சார் பதிவாளர் அலுவலகத்திற்கு வழங்கப்பட்டுள்ள நிரந்தர முன்பணம் என்று சொன்னார். அதனால் அந்த பணம் ரூ.250/-ஐ திரும்ப ஒப்படைக்கப்பட்டது. பின்னர் கணினி அறையை சோதனை செய்ய அந்த அறையில் பணம் ஏதும் இல்லை.

| **வ. எண்.** | **அலுவலர்களின் பெயர், பதவி மற்றும் விலாசம்** | **சோதனையிட அவர்களிடம் இருந்த பணம்** | **தக்க முகாந்திரம் கூறியதால் திருப்பி கொடுக்கப்பட்ட பணம்.** | **தக்க முகாந்திரம் கூறாததால் கைப்பற்றப்பட்ட பணம்.** |
|---|---|---|---|---|
| 1 | திருமதி.ப.தென்றல் (36/19) த/பெ பற்குணன், சார் பதிவாளர் நிலை-2, சார்பதிவாளர் அலுவலகம், வேட்டவலம், கீழ்பென்னாத்தூர் வட்டம், திருவண்ணாமலை மாவட்டம்.(கைபேசி எண்: 94425 80865) | ரூ.1630/- | ரூ.130/- | ரூ.1500/- |
| | சார் பதிவாளர் திருமதி.ப.தென்றல் அவர்களின் கணவரது பெயரில் உள்ள காரில் இருந்து எடுக்கப்பட்ட பணம் | ரூ.62,400/- | ... | ரூ.62,400/- |

| | | | | |
|---|---|---|---|---|
| 2 | திரு.கு.தமிழரசன், (29/19), த/பெ குப்பன், உதவியாளர், சார்பதிவாளர் அலுவலகம், வேட்டவலம், கீழ்பென்னாத்தூர் வட்டம், திருவண்ணாமலை மாவட்டம். (கைபேசி எண்:8144776438) | ரு.841/- | ரு.841/- | ... |
| 3 | திரு.ஜெ.பிரபு (29/19), த/பெ ஜெயக்குமார், தகவல் தொகுப்பு பணியாளர், சார்பதிவாளர் அலுவலகம், வேட்டவலம், கீழ்பென்னாத்தூர் வட்டம், திருவண்ணாமலை மாவட்டம். (கைபேசி எண்:7870050048) | ரு.300/- | ரு.300/- | ... |
| | | | கைப்பற்றப்பட்ட பணம் | ரு.63,900/- |

பின்னர் வேட்டவலம் சார் பதிவாளர் அலுவலகத்திற்கு வந்திருந்த ஆவண எழுத்தர் மற்றும் பொது மக்களை தணிக்கை செய்யப்பட்டது. அதன் விவரம் பின்வருமாறு:

| வ. எண் | அலுவலர்களின் பெயர், பதவி மற்றும் விலாசம் | சோதனையிட அவர்களிடம் இருந்த பணம் | தக்க முகாந்திரம் கூறியதால் திருப்பி கொடுக்கப்பட்ட பணம். | தக்க முகாந்திரம் கூறாததால் கைப்பற்றப்பட்ட பணம். |
|---|---|---|---|---|
| 1. | திரு.R.பட்டாபி (70/2019) த/பெ ராமசாமி பிள்ளை எண்.45/1, ராஜாஜி தெரு, வேட்டவலம், திருவண்ணாமலை | ரு.5,950/- | ... | ரு.5,950/- |

| | | | | |
|---|---|---|---|---|
| | மாவட்டம்(ஆவண எழுத்தர்) செல்:94428 09657 | | | |
| 2. | திரு.K.கணேசன் (30/2019) த/பெ கந்தசாமி, எண்.131/1, சுனை மேட்டுத்தெரு, வேட்டவலம், திருவண்ணாமலை மாவட்டம் (தரகர்) செல்:94428 09657 | ரு.35,850/- | ... | ரு.35,850/- |
| 3. | திரு.க.மணிகண்டன் (30/19) த/பெ கணேசன், எண்.60/46, தேரடித்தெரு, வேட்டவலம், திருவண்ணாமலை மாவட்டம். செல்:9787682741 | ரு.400/- | ரு.400/- | ... |
| 4. | திரு.கி.தேவா (26/2019) த/பெ கிருஷ்ணன், எண்.183/63G, பாரதிதாசன் தெரு, வேட்டவலம், திருவண்ணாமலை மாவட்டம். செல்:99006 57103 | ரு.9,530/- | ரு.9,530/- | ... |
| 5. | திரு.பூ.கணேசன் (30/19) த/பெ பூங்காவனம், வேட்டவலம் மெயின் ரோடு, நாயனூர், திருவண்ணாமலை மாவட்டம். செல்:96269 07091 | ரு.500/- | ரு.500/- | ... |
| 6. | திரு.மு.வீராசாமி (50/2018) த/பெ முத்து, எண்.445, புது மாதா கோயில் தெரு, மதுராம்பட்டு, திருவண்ணாமலை மாவட்டம். | ரு.2,220/- | ரு.2,220/- | ... |

| | | | | |
|---|---|---|---|---|
| 7. | திரு.ந.சுதாகரன் (37/2019) த/பெ நடராஜன், எண்.287, பிள்ளையார் கோயில் தெரு, கட்டுப்பூண்டி, திருவண்ணாமலை மாவட்டம். செல்:82488 26167 | ரு.7,930/- | ரு.7,930/- | ... |
| 8. | திரு.து.ஜான் பீட்டர் (35/2019) த/பெ துரைசாமி, எண்.298, மாதா கோவில் தெரு, செல்லங்குப்பம், திருவண்ணாமலை மாவட்டம். செல்:99524 26465 | ரு.3,500/- | ரு.3,500/- | ... |
| 9. | திருமதி.ஜா.விரோனிகா (27/2019) க/பெ ஜான் பீட்டர், எண்.298, மாதா கோவில் தெரு, செல்லங்குப்பம், திருவண்ணாமலை மாவட்டம். செல்:99524 26465 | ரூ.42/- | ரூ.42/- | ... |
| 10. | திரு.மா.துரைசாமி (57/2018) த/பெ மாணிக்கம், எண்.298, மாதா கோவில் தெரு, செல்லங்குப்பம், திருவண்ணாமலை மாவட்டம். செல்:99524 26465 | ரூ.10/- | ரூ.10/- | ... |
| 11. | திரு.ஏ.வெங்கடேசன், (23/2019), த/பெ ஏழுமலை, விழுப்புரம் ரோடு, வேட்டவலம், திருவண்ணாமலை மாவட்டம். செல்:95002 14755 | ரு.1,000/- | ரு.1,000/- | ... |

| | | | | |
|---|---|---|---|---|
| 12. | திரு.க.பாக்யராஜ் (37/2019) த/பெ கண்ணன், எண்.137, ஏரிக்கரை தெரு, மதுராம்பட்டு கிராமம், திருவண்ணாமலை மாவட்டம். செல்:80727 37971 | ரூ.2,580/- | ரூ.2,580/- | ... |
| 13. | திரு.கு.விஜயன் (57/2019) த/பெ குப்புசாமி, தாமரை நகர், திருவண்ணாமலை மாவட்டம். | ரூ.300/- | ரூ.300/- | ... |
| | | | கைப்பற்றப்பட்ட பணம் | ரூ.41,800/- |

இந்த திடீர் சோதனையின்போது, சார் பதிவாளர் நிலை-2 திருமதி.ப.தென்றல், அவர்களிடம் சார் பதிவாளர் அலுவலகத்தின் அலுவலக வருகை பதிவேட்டை கேட்க, அவர் எடுத்து ஆஜர் செய்தார். அதில் ஜனவரி 30-ஆம் தேதியை பார்வையிட, அதில் சார் பதிவாளர் மற்றும் உதவியாளர் திரு.கு.தமிழரசன் ஆகிய இருவரும் கையெழுத்திட்டு இருந்தனர். மேற்படி வருகை பதிவேட்டை விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. அதில் நானும், சார் பதிவாளர் திருமதி.ப.தென்றல் மற்றும் திருவண்ணாமலை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் துணை கண்காணிப்பாளர் திரு.வி.சரவணகுமார் ஆகியோர் கையொப்பம் செய்தோம். பின்னர் "அ" பதிவேடு குறித்து சார் பதிவாளர் திருமதி.ப.தென்றல் அவர்களிடம் கேட்க, அவர் தற்போது 2019-ஆம் ஆண்டு முதல் இணைய வழியில் பதிவு நடைபெறுவதாகவும், அதனுடைய பதிவுகளை தரவிறக்கம் செய்து, ஒவ்வொரு மாதமும் கோப்பு செய்யப்படுவதாக சொன்னார். 30.01.2019-ஆம் தேதி பதிவான ஆவணங்கள் தொடர்பாக கேட்டபோது, "அ" கணக்கு அறிக்கையை பதிவிறக்கம் செய்து அதை ஆஜர் செய்தார். அதில், மேற்கூறியவாறு 29 ஆவணப்பதிவுகளும், 6 நகல்கள் ஒப்புதல் அளிக்கப்பட்டதற்கான பதிவுகள் இருந்தது. அது பக்கம் - 1 முதல் 3 வரை பதிவிறக்க அறிக்கையாக இருந்தது. அதில் இறுதி பக்கத்தில் நானும் சார் பதிவாளர் திருமதி.ப.தென்றல், மற்றும் திருவண்ணாமலை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் துணை கண்காணிப்பாளர் திரு.வி.சரவணகுமார் ஆகியோர் கையொப்பம் செய்தோம். மேற்படி பதிவிறக்கம் செய்யப்பட்ட "அ" கணக்கு அறிக்கையானது விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும், "D" கணக்கு பதிவேட்டை தற்போது ஆன் லைனில் பதிவேற்றம் செய்யப்படுவதாக

சொன்னதால், 30.01.2019-ஆம் தேதியன்று பதிவேற்றம் செய்யப்பட்ட ஆறு சான்றிட்ட ஆவண நகல்கள் வழங்கப்பட்ட விவரம் மற்றும் நான்கு வில்லங்க சான்று வழங்கப்பட்ட விவரங்களை பதிவிறக்கம் செய்து, சார் பதிவாளர் "D" கணக்கு ஒரு பக்க அறிக்கையை ஆஜர் செய்தார். அதில் ஆறு சான்றிட்ட ஆவண நகல்கள் வழங்கப்பட்ட விவரம் மற்றும் நான்கு வில்லங்க சான்று வழங்கப்பட்ட விவரங்கள் இருந்தன. அதில் நானும் சார் பதிவாளர் திருமதி.ப.தென்றல் மற்றும் திருவண்ணாமலை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் துணை கண்காணிப்பாளர் திரு.வி.சரவணகுமார் ஆகியோர் கையொப்பம் செய்தோம். பின்னர் நிரந்தர முன்பணத்தொகை குறித்த பதிவேட்டை சார் பதிவாளர் திருமதி.ப.தென்றல் அவர்களிடம் கேட்க, அவர் நிரந்தர முன்பணத்தொகை குறித்தான விவரங்களை "H" கணக்கு பதிவேட்டில் பதிவுகள் இருக்கும் என்று கூறி, அதை எடுத்து ஆஜர் செய்தார். அது பக்கம் 01 முதல் பக்கம் 204 இருந்தது. அதில் பக்கம் 01 முதல் பக்கம் 66 வரை பதிவுகள் இருந்தது. அதில் இறுதியாக 29.01.2019-ஆம் தேதி வரை பதிவு செய்யப்பட்டிருந்தது. சார் பதிவாளர் திருமதி.ப.தென்றல் அவர்கள் ஆஜர் செய்த நிரந்தர முன்பணம் ரூ.250/- மற்றும் அது சம்மந்தமான "H" கணக்கு பதிவேடும் திரும்ப அவரிடமே கொடுக்கப்பட்டது. பின்னர், சார் பதிவாளர் திருமதி.ப.தென்றல் அவர்கள் ஆஜர் செய்த தனி நபர் ரொக்கப்பதிவேடு பார்க்க, அது பக்கம் 1 முதல் பக்கம் 42 வரை இருந்தது. அதில் பக்கம் 01 முதல் பக்கம் 06 பதிவுகள் செய்யப்பட்டிருந்தது. அந்த பதிவேட்டின் ஆறாவது பக்கத்தில் 30.01.2019-ஆம்தேதியன்று சார் பதிவாளர் திருமதி.ப.தென்றல் மற்றும் உதவியாளர் திரு.கு.தமிழரசன் ஆகியோரின் பதிவுகள் இருந்தது. அந்த பதிவேட்டின் பக்கம் 6-இல் நானும் சார் பதிவாளர் திருமதி.ப.தென்றல், மற்றும் திருவண்ணாமலை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் துணை கண்காணிப்பாளர் திரு.வி.சரவணகுமார் ஆகியோர் கையொப்பம் செய்தோம். அந்த பதிவேடும் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. பின்னர் திரு.G.ஏழுமலை த/பெ கோவிந்தசாமி என்பவரின் பெயரில் உள்ள பதிவு எண்.TN 25 BJ 2426 TATA Tiago Car என வாகனப்பதிவு சான்றின் ஒளிநகலில் நானும் சார் பதிவாளர் திருமதி.ப.தென்றல், மற்றும் திருவண்ணாமலை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் துணை கண்காணிப்பாளர் திரு.வி.சரவணகுமார் ஆகியோர் கையொப்பம் செய்தோம். அந்த பதிவுச்சான்றின் ஒளிநகல் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும், சார் பதிவாளர் திருமதி.ப.தென்றல் அவர்களின் ஹேண்ட் பேக்கில் இருந்து கைப்பற்றப்பட்ட பணம் ரூ.1,500/-, சார் பதிவாளர் திருமதி.ப.தென்றல் அவர்கள் பயன்படுத்தி வரும் கார் TN 25 BJ 2426

TATA Tiago Car –ன் முன்பக்க டேஷ்போர்டில் இருந்து கைப்பற்றப்பட்ட தக்க முகாந்திரம் கூற இயலாத பணம் ரூ.62,400/-, ஆவண எழுத்தர் திரு.R.பட்டாபி (70/2019), த/பெ ராமசாமி பிள்ளை எண்.45/1, ராஜாஜி தெரு, வேட்டவலம், திருவண்ணாமலை மாவட்டம் என்பவரிடமிருந்து கைப்பற்றப்பட்ட தக்க முகாந்திரம் கூற இயலாத பணம் ரூ.5,950/- மற்றும் தரகர் திரு.K.கணேசன் (30/2019), த/பெ கந்தசாமி, எண்.131/1, சுனை மேட்டுத்தெரு, வேட்டவலம், திருவண்ணாமலை மாவட்டம் என்பவரிடமிருந்து கைப்பற்றப்பட்ட தக்க முகாந்திரம் கூற இயலாத பணம் ரூ.35,850/-, ஆக கையூட்டு என்று கருதப்படும் மற்றும் தக்க முகாந்திரம் கூற இயலாத, சந்தேகத்திற்கிடமான மொத்த பணம் ரூ.1,05,700/-யை இருதுறை திடீர்சோதனையில் கைப்பற்றப்பட்டது. மேற்படி அலுவலகத்தில் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை அறிவிப்பு பலகை வைக்கப்படவில்லை, மேலும், அலுவலகத்தில் CCTV கேமிரா பொருத்தப்படவில்லை. இந்த திடீர் சோதனை 30.01.2019 இரவு 23.55 மணிக்கு முடிக்கப்பட்டது. இந்த செயல்முறையின் நகல் சார்பதிவாளர் அவர்களுக்கு வழங்கப்பட்டது. இன்று 31.01.2019-ல் பிற்பகல் 16.00 மணிக்கு திருவண்ணாமலை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் ஆஜராகி பத்திரம், பிற பதிவுகள் மற்றும் சான்றிதழ்கள் பெற வரும் பொது மக்களிடம் அவர்களுக்கு செய்ய வேண்டிய வேலைகளுக்காக சார்பதிவாளர் மற்றும் அலுவலக பணியாளர்கள் தனித்தனியாக பதிவு செய்யப்படும் பத்திர மதிப்புகளுக்கு ஏற்பவும், அவரவர் செய்து முடிக்க வேண்டிய பணிகளுக்காக நேரடியாகவும், ஆவண எழுத்தர்கள் மற்றும் இடைத்தரகர்கள் (புரோக்கர்கள்) மூலமும் கேட்டு பெற்ற கணக்கில் வராத கையூட்டு என்று கருதப்படும் மற்றும் தக்க முகாந்திரம் கூற இயலாத, சந்தேகத்திற்கிடமான மொத்த பணம் ரூ.1,05,700/- மற்றும் கைப்பற்றப்பட்ட ஆவணங்கள் ஆகியவற்றை தங்களிடம் ஒப்படைக்கிறேன். மேற்கொண்டு வழக்கு பதிவு செய்து நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். Sd.(xxxxxx) (து.கிருஷ்ணமூர்த்தி) மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர், வேலூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்கள், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், வேலூர்.

Sir, Received the Complaint and the enclosures and registered a case in Tiruvannamalai Vigilance and Anti Corruption Crime No. 02/2019 u/s 7 of PC Act 1988 as amended by PC (Amendment) Act 2018 on 31.01.2019 at 1630 Hrs. Sd(xxxx) V.SARAVANAKUMAR, Deputy Superintendent of Police, Vigilance and Anti Corruption, Tiruvannamalai.

Original FIR along with the Original typed complaint of Tr.T.Krishnamoorthy, Inspection Cell Officer, Vellore and Tiruvannamalai Districts is submitted to the Hon'ble Chief Judicial Magistrate and Special Judge, Tiruvannamalai and a Copy of FIR submitted to the Director, V&AC, Chennai-16.

வி.சரவணகுமார் 31/1/19
DSP, V&AC, Tiruvannamalai.